# இனிய தமிழை இன்புறக் கற்போம்

## தாய்மொழிகளின் கருத்தரங்கு 2026

1 ஆகஸ்டு 2026

# பகிர்வின் நோக்கம்

- பிள்ளைகள் தமிழ்மொழியை மகிழ்வுறக் கற்பதற்குரிய உத்திகளைப் பகிர்ந்துகொள்ளுதல்.

- நடைமுறை வாழ்க்கைச் சூழலில் தன்னம்பிக்கையுடன் தமிழில் உரையாடப் பிள்ளைகளை ஊக்குவித்தல்பற்றித் தெரிவித்தல்.

- இல்லத்தில் தமிழ்க் கதைநூல்கள் படித்தலை ஊக்குவித்தல்.

# மொழி கற்றலில் பெற்றோரின் பங்கு



- ஒரு குழந்தையின் மொழி கற்றல் இல்லத்திலிருந்தே தொடங்குகிறது.
- பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் தமிழ்மொழி கற்றலுக்குரிய வலுவான அடித்தளத்தை இல்லத்திலேயே அமைத்துக் கொடுக்க வேண்டும்.

# தமிழ்மொழிப் புழக்கம்

இன்றைய நிலை என்ன?

- பல வீடுகளில் தமிழ்மொழி பேசப்படுவதில்லை.
- பெற்றோர் தமிழில் பேசுவதைப் பிள்ளைகள் கேட்கிறார்கள். ஆனால், பிள்ளைகள் தமிழில் பேசத் தயங்குகிறார்கள்.
- மொழி வாழ வேண்டுமென்றால் அது பேசப்பட வேண்டும்.

# பேசுதல் திறனை மேம்படுத்துதல்

இளம்வயது முதலே பிள்ளைகளின் வாய்மொழித் திறனை மேம்படுத்துவதில் பெற்றோர் கவனம் செலுத்துதல் அவசியம். நடைமுறை வாழ்க்கைச் சூழல்களில் பிள்ளைகள் தன்னம்பிக்கையுடன் தமிழில் உரையாடப் பெற்றோர் வழிகாட்ட வேண்டும்.



# பேசுதல் திறன் ஏன் முக்கியம்?

- பேசுவதன் வாயிலாக மொழி உயிர்பெறுகிறது.
- கேட்டலும் பேசுதலும் மொழி கற்றலின் அடிப்படைத் திறன்கள்.
- தன்னம்பிக்கையுடன் பேசும் பிள்ளைகளால் பள்ளியில் சிறப்பாகப் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ள முடியும்.

# பெற்றோர் பின்பற்றுவதற்கு உகந்த சில உத்திமுறைகள்

- வீட்டில் யாராவது ஒருவர் எப்போதும் தமிழில் பேசுதல்
- பிள்ளைகள் ஆங்கிலத்தில் பேசினாலும் தொடர்ந்து தமிழில் பேசுதல்
- தவறுகளைத் திருத்துவதைவிடப் போலச்செய்து காட்டுதல்
- தினமும் ஒரு தமிழ்ச்சொல்லை அறிமுகம் செய்தல்
- தமிழ்ப் பாடல்களைச் சேர்ந்து பாடுதல்; தமிழ்க் கேலிப்படங்களைச் சேர்ந்து பார்த்தல்.



# பிள்ளைகள் விரும்பும் வகையில் மொழிப் பயன்பாட்டை ஊக்குவித்தல்

- வானொலி கேட்டல், தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகளைப் பார்த்தல்
- குறிப்பிட்ட நேரத்திற்குத் தமிழில் மட்டுமே பேசுதல்
- விளையாட்டு வாயிலாகத் தமிழில் பேச வைத்தல்
- கதையிலுள்ள கதாபாத்திரமாக மாறிப் பேசுதல்
- செய்தி, செய்தித்தாள் படித்தல்; செய்திகளைப்பற்றிப் பேசுதல்
- மின்னூல்களைப் படித்தல்

# பெற்றோர் பின்பற்றுவதற்கு உகந்த சில உத்திமுறைகள்

## பெற்றோருள் ஒருவர் தமிழறிந்தவர் (One Parent One Language)

- வீட்டில் யாராவது ஒருவர் எப்போதும் தமிழில் பேசுதல் (எ-டு: பெற்றோர், தாத்தா, பாட்டி, உறவினர்)
- பிள்ளைகள் ஆங்கிலத்தில் பேசினாலும் தொடர்ந்து தமிழில் பேசுதல்
- தவறுகளைத் திருத்துவதைவிடப் போலச்செய்து காட்டுதல்
- தினமும் ஒரு தமிழ்ச்சொல்லை அறிமுகம் செய்தல்
- தமிழ்ப் பாடல்களைச் சேர்ந்து பாடுதல்
- தமிழ்க் கேலிப்படங்களைச் சேர்ந்து பார்த்தல்; அதைப்பற்றி உரையாடுதல்
- பிள்ளைகள் பேசுவதைக் கவனமாகக் கேட்டல்
- பிள்ளைகள் பேசுவதைப் பாராட்டுதல்

# பிள்ளைகள் விரும்பும் வகையில் மொழிப் பயன்பாட்டை ஊக்குவித்தல்

- வானொலி கேட்டல் - (எ-டு: தமிழ்ப் பாடல்கள்)
- தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகளைப் பார்த்தல் (தமிழ்க் கேலிப்படங்கள்)
- குறிப்பிட்ட நேரத்திற்குத் தமிழில் மட்டுமே பேசுதல்
- விளையாட்டு வாயிலாகத் தமிழில் பேச வைத்தல் (வீட்டிலுள்ள பொருள்களுக்குத் தமிழில் பெயர்களைச் சொல்லும் விளையாட்டு)
- கதையிலுள்ள கதாபாத்திரமாக மாறிப் பேசுதல்
- செய்தி, செய்தித்தாள் படித்தல்
- நாட்டு நடப்புப்பற்றிப் பேசுதல்
- நூல்களைப் படித்தல்

# கல்வி அமைச்சு உருவாக்கியுள்ள வளங்கள்




பெரிய புத்தகங்கள்




சிறுவர் கதைநூல்கள்




பட அட்டைகள்



பேசுதலுக்குரிய அசைவுப்படக் காட்சி



மின்னூல்கள்

# முறைப்படுத்தப்பட்ட வாசிப்புத் திட்டம்



இளம்பருவம்முதல்
பிள்ளைகளிடம் வாசிப்புப்
பழக்கத்தை வளர்த்தல்

தாய்மொழி நூல்களை
மாணவர்கள் விரும்பிப்
படிக்கச் செய்தல்

# Spark interest, Open minds, Appreciate cultural roots, Rise as a bilingual reader

ஆர்வம் ஒளிர்தல், மனந்திறத்தல், பண்பாட்டு வேர்களைப் போற்றுதல், இருமொழி வாசகராக எழுச்சிபெறுதல்



# பெற்றோரது பங்கு

## 1. ஊக்குவிப்பாளர்

- உங்கள் பிள்ளை தாய்மொழிப் புத்தகங்களைப் படிப்பதில் சிரமத்தை எதிர்கொள்ளும்போது, நீங்கள் அவரை விடாமுயற்சியுடன் செயற்பட ஊக்குவிப்பதோடு சிரமங்களைச் சமாளிப்பதற்கும் உதவலாம். உங்கள் பிள்ளை தாய்மொழியில் விரும்பிப் படித்து இன்புற உதவுங்கள்.

## 2. முன்மாதிரி

- நீங்கள் தாய்மொழியில் வாசிப்பவராக இருந்தால் அது உங்கள் பிள்ளை உங்களைப் பார்த்து ஊக்கம் பெற உதவும்.
- பெற்றோர்-பிள்ளை உறவை வளர்ப்பதற்குத் தாய்மொழிப் புத்தகங்களை உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து படித்து, அதைப்பற்றி உரையாடி, எண்ணங்களைப் பரிமாறிக்கொள்ளுங்கள்.

## 3. வழிநடத்துநர்

- உங்கள் பிள்ளைக்கு வாசிப்பில் ஆதரவளிக்கப் பரந்த அளவிலான வளங்களைப் பயன்படுத்துங்கள்.
- உங்கள் பிள்ளையை வாசிப்புத் தொடர்பான சமூக நிகழ்ச்சிகளில் பங்கேற்க ஊக்கப்படுத்துங்கள். இதன் வாயிலாக, உங்கள் பிள்ளையால் பாடத்திட்டத்துக்கு அப்பால் பரந்துபட்ட வாசிப்பு வளங்களைக் கண்டறிந்து தெரிவுசெய்ய இயலும்.





# பெற்றோர் செய்யக்கூடியவை

## கற்றலுக்கு ஏதுவான சூழலை உருவாக்குதல்

வீட்டில் நூலகம் அமைத்துப் புத்தகங்களைப் படிக்க உந்துதல் அளியுங்கள்.

## வாசிப்புப் பழக்கங்களை வளர்த்தல்

வாசிப்பு நேரத்தை வழக்கமாக்கிக் கொண்டு பிள்ளையுடன் படியுங்கள்.

## சுயமாக வாசித்தல் இலக்குகளை நிர்ணயிக்க ஊக்குவித்தல்

பிள்ளைகள் தங்களுக்குரிய வாசித்தல் இலக்குகளை நிர்ணயிக்க உதவுங்கள்.

# பெற்றோர் செய்யக்கூடியவை



## பலவகைக் கதைகளைப் படிப்பதற்கு ஊக்குவித்தல்

பலவகைக் கதைகளை அறிமுகப்படுத்தி அவற்றைப்பற்றி உரையாடுங்கள்.

## பிள்ளைகளுக்குப் பார்வையாளராக இருத்தல்

பிள்ளைகள் தாங்கள் படித்த கதையைக் கூறச் சொல்லி, அவர்களுடைய கதையைக் கேட்கும் பார்வையாளராக இருங்கள்.

## பிள்ளையின் வாசிப்புச் செயல்முறைக்கு முழு ஆதரவளித்தல்

குறிப்பிட்ட சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்களைக் கண்டறியப் பல்வேறு வளங்களைப் பயன்படுத்துங்கள்.



# பெற்றோர் செய்யக்கூடியவை

## வாசிப்பை அர்த்தமுள்ள மகிழ்ச்சிகரமான செயல்முறையாக்குதல்

கதையிலுள்ள படங்களைப்பற்றிப் பேசுதல்; பாத்திரமேற்று நடித்தல்; எண்ணங்களைப் பேச்சின் வாயிலாக வெளிப்படுத்துதல் - இவற்றை ஊக்கப்படுத்துங்கள்.

## பிள்ளையுடன் இணைந்து சொற்களைத் தொகுத்தல்

கற்றுக்கொண்ட புதிய சொற்களின் பட்டியலைத் தொகுக்க உதவுங்கள்.

## வெளிப்புற உதவியை நாடுதல்

தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் வாயிலாகப் பெறக்கூடிய வளங்களைப் (கதைகள், ஒலிப்புத்தகங்கள், செயலிகள்) பயன்படுத்திக்கொள்ளுங்கள்.



# பெற்றோர் ஆதரவு

- படித்தலில் பிள்ளைகளின் ஆர்வத்தை இளம்வயது முதலே ஊக்குவிக்க வேண்டும்.
- பிள்ளைகளுக்குப் பிடித்த புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கவும் அவற்றைப் படிக்கவும் உதவ வேண்டும்.



- அன்றாடம் வீட்டில் தமிழில் பேசுவது பிள்ளைகள் தமிழில் சிந்தித்துப் பேச உதவும்.
- தமிழில் பேசுவதற்குத் தேவையான சொல்வளம் இயல்பாகவே பிள்ளைகளுக்குக் கிடைக்க உதவ வேண்டும்.

# நடவடிக்கை நேரம்



# தமிழ் வளங்களைப் பெறுவதற்குரிய தளங்கள்







https://go.gov.sg/tpctamilresources

# வழிகாட்டு சிறப்பாய்வாளரது அனுபவப் பகிர்வு

## முனைவர் சுப்புலெட்சுமி சிங்காரம்



# நன்றி

